1. ‘தண்டமிழ் ஆசான். சாத்தன் நன்னூற் புலவன்’ என்று மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனாரைப் பாராட்டியவா

a) கம்பர் **b) இளங்கோவடிகள்**

c) திருத்தக்க தேவர் d) காரியாசான்

2. கம்பரைப் புரந்தவர் யார்?

a) ஒட்டக்கூத்தர் **b) சடையப்பவள்ளல்**

c) சீதக்காதி d) சந்திரன் சுவர்க்கி

3. ஜி.யு. போப் திருவாசகத்தை எந்த மொழியில் மொழிபெயர்த்தார்?

a) பிரெஞ்சு b) கிரேக்கம்

**c) ஆங்கிலம்** d) ஜெர்மன்

4. நடுவணரசு தமிழைச் செம்மொழியாக அறிவித்த ஆண்டு?

**a) 2004** b) 2003

c) 2005 d) 2002

5. பெயரெச்சத்தை எடுத்து எழுது

a) படித்து b) எழுதி

**c) வந்த** d) நின்றான்

6. பொருத்துக

a) அறுவை வீதி 1. அந்தணர் வீதி

b) கூல வீதி 2. பொற்கடை வீதி

c) பொன் வீதி 3. ஆடைகள் விற்கும் வீதி

d) மறையவர் வீதி 4. தானியக்கடைவீதி

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 4 | 3 | 2 | 1 |
| **b)** | **3** | **4** | **2** | **1** |
| c) | 1 | 3 | 2 | 4 |
| d) | 2 | 1 | 3 | 4 |

7. துணி கலையரசியால் தைக்கப்பட்டது - இதற்குரிய செய்வினை தொடரை தேர்ந்தெடு

a) கலையரசி துணி தைத்தாள்

b) கலையரசி தைத்தாள் துணி

NIT

c) கலையரசி என்ன தைத்தாள்

**d) கலையரசி துணியைத் தைத்தாள்**

8. “ஒறுத்தாரை ஒன்றாக வையாரே” - இத்தொடரில் “ஒறுத்தார்” என்பதன் இலக்கணக்குறிப்பு

a) முற்றெச்சம்
b) தொழிற்பெயர்
**c) வினையாலணையும் பெயர்**
d) வினையெச்சம்

9. வா- என்னும் வேர்ச் சொல்லின் வினையெச்சத்தைக் கூறு

a) வந்தான்
**b) வந்து**
c) வருதல்
d) வந்த

10. பாரதிதாசனிடம் தொடக்க கல்வி பயின்றவர்

a) முடியரசன்
**b) வாணிதாசன்**
c) சுரதா
d) மோகனரங்கன்

11. “விடிவெள்ளி” என்ற புனைப்பெயரைக் கொண்ட கவிஞர்

**a) ஈரோடு தமிழன்பன்**
b) மு. மேத்தா
c) சாலை. இளந்திரையன்
d) சுரதா

12. தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை பரிசு பெற்ற சுரதாவின் நூல்

a) துறைமுகம்
b) சுவரும் சுண்ணாம்பும்
**c) தேன்மழை**
d) இது எங்கள் கிழக்கு

13. எனக்கு வறுமையும் உண்டு; மனைவி மக்களும் உண்டு; அவற்றோடு மானமும் உண்டு - எனக் கூறியவர்

**a) பாவாணர்**
b) காந்தி
c) தெ.பொ.மீ
d) அயோத்திதாசப் பண்டிதர்

14. குறுந்தொகை எனும் நூலைத் தொகுத்தவர்

**a) பூரிக்கோ**
b) நல்லாதனார்
c) கணிமேதாவியர்
d) கார்மேகப்புலவர்

15. ‘உத்தர வேதம்’ என்று அழைக்கப்படும் நூல்

a) நாலயிரத்திவியப்பிரந்தம்
b) நாலடியார்
**c) திருக்குறள்**
d) இன்னாநாற்பது

16. பொருந்தாத ஒன்றைத் தெரிவு செய்க

a) ஏலாதி **<u>b) ஆசாரக் கோவை</u>**

c) திரிகடுகம் d) சிறுபஞ்சமூலம்

17. ‘திரைக்கவி திலகம்’ என்ற சிறப்புக்குரியவர்

a) வாலி b) உடுமலை நாராயணகவி

c) பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் **<u>d) மருகதாசி</u>**

18. பொருத்துதல்:

a) திணைமாலை நூற்றைம்பது 1. உ.வே.சாமிநாதைய்யர்

b) திரிகடுகம் 2. கணிமேதாவியர்

c) திணைமொழி ஐம்பது 3. நல்லாதனார்

d) புறப்பொருள் வெண்பாமாலை 4. கண்ணஞ்சேந்தனார்

| | a | b | c | c |
|---|---|---|---|---|
| a) | 3 | 1 | 2 | 4 |
| b) | 1 | 4 | 2 | 3 |
| **<u>c)</u>** | **<u>2</u>** | **<u>3</u>** | **<u>4</u>** | **<u>1</u>** |
| d) | 4 | 3 | 2 | 1 |

19. ‘இல்லை’ - என்பதன் இலக்கணக் குறிப்பு கூறுக

a) தெரிநலை வினைமுற்று b) எதிர்மறை பெயரெச்சம்

**<u>c) குறிப்பு வினைமுற்று</u>** d) வியங்கோள் வினைமுற்று

20. “Might is ritht’ - இதன் தமிழாக்கம்

a) ‘கடமையே உரிமை’ **<u>b) ‘வல்லான் வகுத்ததே வாய்க்கால்’</u>**

c) ‘வலிமையே சரியான வழி’ d) ‘ ஒற்றுமையே வலிமை’

21. பொருத்துக:

a) குமரன், தென்னை 1. இடப்பெயர்

b) காடு, மலை 2. காலப்பெயர்

c) பூ, காய் 3. பொருட்பெயர்

d) திங்கள், வாரம் 4. சினைப்பெயர்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 4 | 1 | 3 | 2 |

NIT

**b) 3 1 4 2**

c) 3 4 2 1

d) 2 3 1 4

22. பம்பல் சம்பந்தம் நிறுவிய நாடக சபை

**a) சுகுணவிலாச சபை**

b) மாடர்ன் தியேட்டர்

c) பாய்ஸ் கம்பெனி

d) கூத்துப்பட்டறை

23. "இந்திய அரசியலில் சாணக்கியர்" என்று போற்றப்படுபவர்

a) காந்தியடிகள்

b) பாலகங்காதர திலகர்

**c) இராசகோபாலாச்சாரியார்**

d) சர்தார் வல்லபாய் படேல்

24. பூக்களில் சிறந்த பூ "பருத்திப் பூ" எனக் கூறியவர்

a) சோமசுந்தர பாரதியார்

**b) திரு.வி. கலியாண சுந்தரனார்**

c) பாரதிதாசன்

d) தாரா பாரதி

25. 'குயில்' என்ற இதழை நடத்தியவர்

a) சுரதா

b) வாணிதாசன்

c) பாரதியார்

**d) பாரதிதாசன்**

26. திருக்குறளில் "ஏழு" என்னும் எண்ணுப்பெயர் எத்தனை குறட்பாவில் இடம் பெற்றுள்ளது?

a) 11 b) 09 **c) 08** d) 10

27. கீழ்க்கண்டநூற்களில் "தமிழ் மூவாயிரம்" என்னும் வேறு பெயர் கொண்ட நூல் எது?

a) திரிகடுகம்

b) திருவள்ளுவமாலை

**c) திருமந்திரம்**

d) திருக்குறள்

28. "தொண்டர்சீர் பரவுவார்" என்று போற்றப்படுபவர் யார்?

a) அப்பூதியடிகள்

b) திருநாவுக்கரசர்

**c) சேக்கிழார்**

d) திருஞானசம்பந்தர்

29. யாருடைய அறிவுரைப்படி ஆதிரையிடம் மணிமேகலை முதன் முதலில் பிச்சையேற்றாள்?

a) கவுந்தியடிகள்

b) மாதவி

**c) அறவணவடிகள்**

d) கண்ணகி

30. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிதல்

a) Writs 1. வாரிசுரிமைச் சட்டம்

NIT

b) Succession Act — 2. உரிமைச்சட்டங்கள்

c) Substantive Law — 3. சான்றுச் சட்டம்

d) Evidence Act — 4. சட்ட ஆவணங்கள்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 1 | 3 | 4 | 2 |
| **b)** | **4** | **1** | **2** | **3** |
| c) | 2 | 4 | 3 | 1 |
| d) | 1 | 2 | 3 | 4 |

31. "யாழ் கேட்டு மகிழ்ந்தாள்" - இவ்வாக்கியத்தில் யாழ் என்பது

a) சொல்லாகு பெயர்

b) கருத்தாகு பெயர்

c) காரியவாகு பெயர்

**<u>d) கருவியாகு பெயர்</u>**

32. வாரணம், பௌவம், பரவை, புணரி என்பது ……………க் குறிக்கும்

a) சிங்கம்

**<u>b) கடல்</u>**

c) மாலை

d) சந்தனம்

33. "எயிறு" என்னும் சொல் - சொல்லின் எவ்வகை?

a) திரிசொல்

b) இயற்சொல்

c) வினைத் திரிசொல்

**<u>d) பெயர்த் திரிசொல்</u>**

34. அரியதாம் உவப்ப தன்பினால் அமைந்த காதல்
கீழ்க்காணும் விடைகளுள் சரியான விடை எது?

a) எதுமைக மட்டும் வந்துள்ளது

b) எதுகையும், மோனையும் வந்துள்ளது

c) எதுகை, மோனை, அந்தாதி வந்துள்ளது.

**<u>d) மோனை மட்டும் வந்துள்ளது</u>**

35. காரைக்குடி மீ.சு உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர்

a) சுரதா

b) கண்ணதாசன்

**<u>c) முடியரசன்</u>**

d) நா. காமராசன்

36. வள்ளலார் பதிப்பித்த நூல்

a) ஜீவகாருண்ய ஒழுக்கம்

**<u>b) சின்மய தீபிகை</u>**

NIT

c) இந்திர தேசம் d) வீரசோழியம்

37. கவிஞர் சிற்பியின் சாகித்திய அகாதமி பரிசு பெற்ற நூல்

a) ஒளிப் பறவை b) சிரித்த முத்துக்கள்

**c) ஒரு கிராமத்து நதி** d) நிலவுப் பூ

38. அகழாய்வில் "முதுமக்கள் தாழிகள்" கண்டுபிடிக்கப்பட்ட ஊர்

a) தச்சநல்லூர் **b) ஆதிச்சநல்லூர்**

c) பெரவல்லூர் d) பெரணமல்லூர்

39. 'கம்பராமாயணத்தின் மணிமுடியாக விளங்கும் காண்டம்'

**a) சுந்தர காண்டம்** b) அயோத்திய காண்டம்

c) ஆரண்ய காண்டம் d) யுத்த காண்டம்

40. 'நூறாசிரியம்' என்னும் கவிதை நூலின் ஆசிரியர்

a) கவிஞர் மீரா b) கவிஞர் சுரதா

**c) கவிஞர் பெருஞ்சித்திரனார்** d) மு.மேத்தா

41. 'மடங்கல்' என்னும் சொல்லின் பொருள்

a) மடக்குதல் b) புலி

c) மடங்குதல் **d) சிங்கம்**

42. அகநானூற்றின் கடைசி 100 பாடல்கள் அடங்கிய பகுதி

a) களிற்று யானை நிரை b) மணிமிடைப் பவளம்

**c) நித்திலக் கோவை** d) வெண்பாமாலை

43. இங்கு உடனிலை மெய்ம்மயக்கத்தைக் குறிக்கும் சொல்

a) பொன்மனம் **b) ஆர்த்து**

c) உற்றார் d) சார்பு

44. பொருத்துக

a) இரண்டு சீர்களான அடி 1. நெடிலடி

b) நான்கு சீர்களான அடி 2. கழிநெடிலடி

c) ஐந்து சீர்களான அடி 3. குறளடி

d) ஐந்துக்கும் அதிக சீரடி 4. அளவடி

a b c d

| | | | | |
|---|---|---|---|---|
| a) | 4 | 3 | 2 | 1 |
| b) | 2 | 1 | 3 | 4 |
| c) | 1 | 2 | 3 | 4 |
| **d)** | **3** | **4** | **1** | **2** |

45. அங்காப்பு என்பதன் பொருள்

a) சலிப்படைதல்
**b) வாயைத் திறத்தல்**
c) அலட்டிக் கொள்ளுதல்
d) வளைகாப்பு

46. "கார்குலாம்" - எனும் சொல் எவ்வேற்றுமைத் தொகையைக் குறிக்கும்?

a) ஐந்தாம் வேற்றுமைத் தொகை
b) மூன்றாம் வேற்றுமைத் தொகை
**c) ஆறாம் வேற்றுமைத் தொகை**
d) நான்காம் வேற்றுமைத் தொகை

47. 'சட்டை' என்ற சிறுகதையை எழுதியவர்

a) பார்த்தசாரதி
**b) ஜெயகாந்தன்**
c) மீரா
d) புதுமைப்பித்தன்

48. "கிறிஸ்துவ சமயத்தாரின் கலைக் களஞ்சியம்"
எனப் போற்றப்படம் நூல்

a) இரட்சண்ய மனோகரம்
b) இரட்சன்ய யாத்திரிகம்
c) போற்றி திருவகல்
**d) தேம்பாவணி**

49. "மருமக்கள் வழி மான்மியம்" - என்ற நூலை எழுதியவர்

**a) கவிமணி**
b) சிவதாமு
c) பாரதிதாசன்
d) புதுமைப்பித்தன்

50. "தென்னிந்தியச் சமூக சீர்திருத்தத்தின் தந்தை"
என்று அழைக்கப்படுபவர்

a) பெரியார்
b) அம்பேத்கர்
**c) அயோத்திதாசப் பண்டிதர்**
d) இராமலிங்க அடிகளார்

51. "வள்ளுவரும் தம் குறள் பாவடியால் வையத்தார்
உள்ளுவதெல்லாம் அளர்ந்தார் ஓர்ந்து"
எனத் திருக்குறளை பாராட்டியவா

a) பரிமேலழகர்
b) கபிலர்
c) மாங்குடி மருதனார்
**d) பரணர்**

52. பொருத்துக

a) சயங்கொண்டார் 1. சடகோபரந்தாதி

b) காரியாசான் 2. புறநானூறு

c) கம்பர் 3. கலிங்கத்துப் பரணி

d) கண்ணகானார் 4. சிறுபஞ்சமூலம்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **a)** | **3** | **4** | **1** | **2** |
| b) | 1 | 2 | 4 | 3 |
| c) | 2 | 1 | 3 | 4 |
| d) | 3 | 2 | 4 | 1 |

53. "என் பானோக்கா யாகிலுமுன் பற்றலல்லால் பற்றில்லேன்"
-என்ற வரிகளைப் பாடியவர்

a) திருப்பாணாழ்வார் **b) குலசேகராழ்வார்**

c) பேயாழ்வார் d) ஆண்டாள்

54. 'செறு' என்பதன் பொருள்

a) செருக்கு b) சேறு

c) சோறு **d) வயல்**

55. தமிழக அரசு, கவிஞர் சாலை. இளந்திரையனுக்கு வழங்கிய விருது

**a) பாவேந்தர் விருது** b) பாரதியார் விருது

c) கலைமாமணி விருது d) கவிச்செம்மல் விருது

56. ஜி.யு.போப் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்ட ஆண்டு

a) 1786 b) 1806

c) 1856 **d) 1886**

57. 'மணநூல்' என அழைக்கப்பெறும் நூல்

a) சிலப்பதிகாரம் b) மணிமேகலை

**c) சீவக சிந்தாமணி** d) குண்டலகேசி

58. பொருத்துக:

a) சிந்தை 1. நீர்

b) நவ்வி 2. மேகம்

c) முகில் 3. எண்ணம்

NIT

d) புனல் 4. மான்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 2 | 1 | 3 | 4 |
| b) | 1 | 3 | 4 | 2 |
| **c)** | **3** | **4** | **2** | **1** |
| d) | 4 | 3 | 1 | 2 |

59. தமிழகத்துக்கு இறக்குமதி செய்யப்பட்ட சீனத்து பொருட்களை சரியாக காண்க.

a) ஏலமும், இலவங்கமும்

டி) இஞ்சியும், மிளகும்

**c) பட்டும், சர்க்கரையும்**

ன) முத்தும், பவளமும்

60. இந்திய அரசு அண்ணல் அம்பேத்கருக்கு "இந்திய மாமணி" என்னும் உயரிய விருதை வழங்கிய ஆண்டு எது?

a) 1991

**b) 1990**

c) 1993

d) 1002

61. "ஞானபோதினி" என்னும் இதழை தொடங்கி வைத்தவர் யார்?

a) முடியரசன்

**b) மு.சி. பூர்ணலிங்கம்**

c) நாமக்கல்லார்

d) சுரதா

62. பரிதிமாற் கலைஞர் பிறந்த ஆண்டு

a) 1860

b) **1870**

c) 1880

d) 1890

63. பொருந்தாத நூலை எடுத்து எழுதுக

a) நான்மணிக்கடிகை

b) நாலடியார்

**c) புறநானூறு**

d) இனியவை நாற்பது

64. அறிவுடையார் நட்பு எதனைப் போன்றது

a) மலையைப் போன்றது

b) கடலைப் போன்றது

**c) வளர்பிறையைப் போன்றது**

d) தேய்பியையைப் போன்றது

65. பொருத்துக

a) ஒழுக்கத்தின் எய்துவர் 1. செல்வம் நிலைக்காது

b) இழுக்கத்தின் எய்துவர் 2. மேன்மை

c) பொறாமை உடையவரிடம் 3. உயர்வு இருக்காது

NIT

c) ஒழுக்கமில்லாதவரிடம் 4. எய்தாப்பழி

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **a)** | **2** | **4** | **1** | **3** |
| b) | 2 | 3 | 1 | 4 |
| c) | 1 | 4 | 2 | 3 |
| d) | 3 | 4 | 1 | 2 |

66. வாய்மை எனப்படுவது

a) குற்றமோடு பேசுதல்
b) மற்றவர் வருந்த பேசுதல்
c) சுடும் சொற்களைப் பேசுதல்
**D) தீங்கு தராத சொற்களைப் பேசுதல்**

67. “இறந்தும் இளவாது வாழும் தமிழ் மாணவர்!
அவர் தமிழ் உள்ளங்களில் இன்றும் வாழ்கின்றார்
என்றும் வாழ்வார்” - யார்?

a) உ.வே.சாமிநாதர்
**b) ஜி.யு.போப்**
c) கால்டுவெல்
d) வீரமாமுனிவர்

68. “இந்திய நூலகத் தந்தை” எனப் போற்றப்படுபவர்

a) சி. இராமநாதன்
**b) சி. இரா. அரங்கநாதன்**
c) ப. கமலநாதன்
d) ம. இளந்திரையன்

69. “வினையே ஆடவர்க்குயிர்” எனக் கூறும் நூல்

**a) குறுந்தொகை**
b) கலித்தொகை
c) புறநானூறு
d) பரிபாடல்

70. “மனமொத்த நட்புக்கு
வஞ்சகம் செய்யாதே”
இக்கூற்றை கூறியவர்

a) கணியன் பூங்குன்றனார்
b) கம்பர்
c) உமறுப்புலவர்
**d) வள்ளலார்**

71. பொங்கலை “அறுவடைத் திருவிழாவாகக்” கொண்டாடும் மேலை நாடுகள்

a) இலங்கை, மலேசியா
**b) ஜப்பான், ஜாவா**
c) மொரீசியஸ், சிங்கப்பூர்
d) இங்கிலாந்து, அமெரிக்கா

72. ஜி.யு. போப் தொகுத்த நூலின் பெயர்

NIT

a) கலம்பகம்

b) காவலூர்க் கலம்பகம்

c) கதம்ப மாலை

**d) <u>தமிழ்ச்செய்யுட் கலம்பகம்</u>**

73. கண்ணதாசன் படைத்த இனிய நாடகம்

a) மாங்கனி

b) ஆயிரம் தீவு

c) அங்கயற்கண்ணி

**d) <u>இராச தண்டனை</u>**

74. வரலாற்றில் வள்ளியம்மையின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும் என்று காந்தியடிகள் எந்த நூலில் கூறினார்?

a) இந்தியன் ஒப்பிலியன்

b) டிஸ்கவரி ஆப் இந்தியா

**c) <u>தென்னாப்பிரிக்கச் சத்தியாக்கிரகம்</u>**

d) யங் இந்தியா

75. "நான் தனியாக வாழவில்லை
தமிழோடு வாழ்கிறேன்"
- இக்கூற்றுக்குரியவர் தமிழ் மூச்சை விட்டு சென்ற நாள்

a) 1973 - செப்டம்பர் - 17

b) 1943 - செப்டம்பர் - 17

**c) <u>1953 - செப்டம்பர் - 17</u>**

d) 1953 - செப்டம்பர் - 17

76. மோசிகீரனார் உடல் சோர்வினால் முரசுக் கட்டிலில்
உறங்கிய போது கவரி வீசிய மன்னன்

**a) <u>சேரன் பெருஞ்சேரல் இரும்பொறை</u>**

b) பாண்டியன் நெடுஞ்செழியன்

c) கோப்பெருஞ்சோழன்

d) முதலாம் குலோத்துங்கன்

77. பொருத்துக

| | |
|---|---|
| a) கவுந்தியடிகள் | 1. ஆயர்குல மூதாட்டி |
| b) மாதரி | 2. மாநாய்கனின் மகள் |
| c) மாதவி | 3. சமணத்துறவி |
| d) கண்ணகி | 4. ஆடலரசி |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **<u>a)</u>** | **<u>3</u>** | **<u>4</u>** | **<u>1</u>** | **<u>2</u>** |
| b) | 1 | 2 | 4 | 3 |
| c) | 2 | 1 | 3 | 4 |
| d) | 3 | 2 | 4 | 1 |

NIT

78. கடிகை என்பதன் பொருள் யாது?

**a) அணிகலன்** b) கடித்தல்

c) கடுகு d) காரம்

79. 'கற்றவனுக்குக் கட்டுச்சோறு வேண்டா'
எனக் கூறும் நூல்

a) நான்மணிக்கடிகை **டி) பழமொழி நானூறு**

c) ஏலாதி ன) திரிகடுகம்

80. குருக், மால்தோ, பிராகுயி என்பன

a) தென் திராவிட மொழிகள் டி) நடுத்திராவிட மொழிகள்

**c) வடதிராவிட மொழிகள்** ன) மேலை நாட்டு மொழிகள்

81. "ஓர் இலட்சிய சமூகம் - சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது" என்றவர்

a) பெரியார் **b) அண்ணல் அம்பேத்கர்**

c) காந்தியடிகள் d) திரு.வி.க

82. திரு.வி.கல்யாணசுந்தரனார் எழுதாத நூல் எது?

a) முருகன் அல்லது அழகு **b) சித்திரக்கவி**

c) உரிமை வேட்டல் d) தமிழ்ச் சோலை

83. பொருந்தாதனவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுக

a) சூசையப்பர் தேம்பாவணியின் பாட்டுடைத் தலைவர்

b) திருமந்திரம் சைவத்திருமுறைகளில் பத்தாவது திருமுறை

c) சங்கரதாஸ் சுவாமிகள் தமிழ் நாடகத் தலைமையாசிரியர்

**d) மதங்க சூளாமணியை இயற்றியவர் மறைமலை அடிகள்**

84. "உவகைத்தொகை" இலக்கண குறிப்பிற்கு பொருந்தாத சொல்லை காண்க

a) கயல்விழி b) மலர் முகம்

**c) வெண்ணிலவு** d) தாமரைக் கண்கள்

85. "கெடாஅ வழி வந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு" - இத்தொடரில் இடம் பெற்ற அளபெடை

a) இன்னிசை அளபெழைட **b) செய்யுளிசை அளபெடை**

c) சொல்லிசை அளபெடை d) ஒற்றளபெடை

86. இலக்கண முறைப்படி குற்றமுடையது எனினும் இலக்கண ஆசிரியர்களால் குற்றமன்று என ஏற்றுக் கொள்ளப்படும வழுவை கண்டுபிடி

**a) வழுவமைதி** b) வினாவழு

c) காலவழு d) வழாநிலை

87. 'யவனர்' என பழந்தமிழரால் அழைக்கப்பட்டோர்

a) ஆங்கிலேயர். போர்ச்சுகீசியர் **b) கிரேக்கர், உரோமானியர்**

c) பிரெஞ்சுக்காரர், அமெரிக்கர் d) சீனர், மலேசியர்

88. பாண்டவர்களிடம் தூது சென்றவர் யார்?

**a) விதுரன்** b) துரியோதனன்

c) தர்மன் d) சகுனி

89. நற்றிணை பாடல்களைத் தொகுப்பித்தவர்

a) பூரிக்கோ b) பாண்டியன் உக்கிர பெருவழுதி

**c) பன்னாடு தந்த மாறன் வழுதி** d) உத்திர சன்மார்

90. "………. நெடுநீர்வாய்க்
கடிதினில் மடஅன்னக் கதியது செலநின்றார்"
- இவ்வடிகள் இடம் பெறும் நூல்

a) பெரியபுராணம் b) மணிமேகலை

**c) கம்பராமாயணம்** d) சீவக சிந்தாமணி

91. "புலனழுகற்ற மந்தணாளன்" - எனப் பாராட்டப்படுபவர்

a) ஓதலாந்தைதயார் b) நக்கீரர்

c) பரணர் **d) கபிலர்**

92. 'சதகம்' என்பது ……………. பாடல்களைக் கொண்ட நூலைக் குறிக்கும். நிரப்புக

a) 10 **b) 100**

c) 400 d) 1000

93. பொருத்துக:

a) வசன நடை கை வந்த வல்லாளர் 1. இராமலிங்க அடிகள்

b) புது நெறி கண்ட புலவர் 2. நாமக்கல் கவிஞர்

c) தைரியநாதர் 3. ஆறுமுக நாவலர்

d) காந்தியக் கவிஞர் 4. வீரமாமுனிவர்

a b c d

| | | | | |
|---|---|---|---|---|
| **a)** | **3** | **1** | **4** | **2** |
| b) | 3 | 4 | 2 | 1 |
| c) | 2 | 1 | 3 | 4 |
| d) | 1 | 4 | 2 | 3 |

94. உ.வே. சாமிநாத ஐயரின் ஆசிரியர் பெயர்

a) ரா.பி சேதுபிள்ளை

b) கடிகை முத்துப்புலவர்

c) சி. இலக்குவனார்

**d) மகா வித்துவான் மீனாட்சி சுந்தரனார்**

95. பொருத்துக

a) சிறுமலை, பூம்பாறை — 1. முல்லை நில ஊர்கள்

b) ஆற்காடு, பனையபுரம் — 2. நெய்தல் நில ஊர்கள்

c) ஆத்தூர், கடம்பூர் — 3. குறிஞ்சி நில ஊர்கள்

d) கீழக்கரை, நீலாங்கரை — 4. மருத நில ஊர்கள்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 2 | 1 | 3 | 4 |
| b) | 3 | 4 | 2 | 1 |
| **c)** | **3** | **1** | **4** | **2** |
| d) | 4 | 2 | 1 | 3 |

96. இதில் 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது யாருடைய மொழி

a) கணியன் பூங்குன்றனார்

b) பாரதியார்

**c) ஔவையார்**

d) கம்பர்

97. அகர வரிசைப் படி சொற்களை சீர் செய்க

a) நைதல் நாடு நொச்சி நுங்கு

b) நுங்கு நொச்சி நாடு நைதல்

c) நொச்சி நுங்கு நைதல் நாடு

**d) நாடு நுங்கு நைதல் நொச்சி**

98. பொருத்து

a) ஐதீகம் — 1. விருந்தோம்பல்

b) இருதயம் — 2. சொத்து

c) ஆஸ்தி — 3. உலக வழக்கு

d) உபசரித்தல் — 4. நெஞ்சகம்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 2 | 3 | 1 | 4 |
| **b)** | **3** | **4** | **2** | **1** |
| c) | 4 | 1 | 2 | 3 |
| d) | 1 | 2 | 3 | 4 |

99. பிற மொழிச் சொற்கள் கலவாத தொடரை எடுத்து எழுதுக

a) சினிமா தியேட்டர் அருகாமையில் உள்ளது

b) திருநெல்வேலி சமஸ்தானம் பெரியது

c) விழாவிற்கு முக்கியஸ்தர்கள் வந்துள்ளனர்

**d) வானூர்தி ஒரு அறிவியல் ஆக்கம்**

100. பொருத்துக

| | |
|---|---|
| a) உரிச்சொற்றொடர் | 1. சூழ்கழல் |
| b) வினைத்தொகை | 2. தழீஇய |
| c) ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் | 3. தடக்கை |
| d) சொல்லிசை அளபெடை | 4. கூவா |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a | 2 | 1 | 3 | 4 |
| **b)** | **3** | **1** | **4** | **2** |
| c) | 1 | 3 | 2 | 4 |
| d) | 4 | 1 | 2 | 3 |

NIT